007 ஜேம்ஸ் பாண்ட்
துப்பறியும்
ராணி காமிக்ஸ்
மொட்டைத் தலை ஒற்றன்
ரூ. 2

விந்தைப் பறவை!

இந்தியாவின் தேசியப் பறவை மயில் என்பது எல்லாருக்கும் தெரியும். அதைப் போல நியூசிலாந்து நாட்டின் தேசியப் பறவை "கீவி" ஆகும்

இந்தப் பறவை நியூசிலாந்து தீவுகளில் மட்டுமே காணப்படுகிறது. இது ஒரு விந்தையான பறவையும்கூட. கோழியின் உருவ அமைப்பைக் கொண்டது. இதற்கு இறக்கைகள் வளர்வது இல்லை. எனவே அதனால் பறக்க முடியாது. ஆனால், இது மனிதனைவிட மிகவும் வேகமாக ஓடக்கூடியது.

கீவி, மரத்தின் அடியில் உள்ள பொந்துகளிலும், குழிகளிலும் வாழ்கிறது. இது சாம்பல் நிறத்தை உடையது. பெரும்பாலும் இரவில்தான் இரை தேடச் செல்லும். அலகு நீளமாக காணப்படும். அதை மண்ணுக்குள் விட்டு பூச்சிகளையும், புழுக்களையும் கொக்கிபோல கவ்விப் பிடித்து உன்னும்.

இதற்கு சுவாச துளைகள் (மூக்கு) அலகின் நுணியில் காணப்படுகிறது. மேலும், இதற்கு மோப்ப சக்தி அதிகம்.

கீவி, ஆண்டுக்கு இரண்டு முட்டை இடுகின்றன. இதனுடைய முட்டைகள் அளவில் மிகப்பெரியது. பறவையின் எடையில் நான்கு அல்லது ஐந்து பங்கில் ஒரு பங்கு இருக்கும். ஆண் பறவைகள்தான் அடை காத்துக் குஞ்சு பொறிக்கின்றன.

நியூசிலாந்து நாட்டில் கீவியின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. அதனால் இப்பறவையை வேட்டையாடக் கூடாது என்று அரசாங்கம் தடைவிதித்து இருக்கிறது.

ராணி காமிக்ஸ் -99 ஆகஸ்டு 1-15
(மாதம் இருமுறை இதழ்) 1988

007 ஜேம்ஸ்பாண்ட் துப்பறியும்

மொட்டைத்தலை ஒற்றன்

சிமித்

விவியன்

ஜோன்ஸ்

ஜேம்ஸ்பாண்ட் லண்டனில் இருந்தார். "உடனே வரவும்" என்று வாஷிங்டனில் இருந்து அழைப்பு வந்தது. உடனே ஜேம்ஸ்பாண்ட் விமானத்தில் பறந்து போனார்.
ஜேம்ஸ்பாண்டை உடனடியாகப் போலீஸ் கமிஷனரை சந்திக்கச் சொல்லவும்.
போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்கு ஜேம்ஸ்பாண்ட் போனார்!
வாருங்கள், ஜேம்ஸ்
உங்களைத்தான் எதிர்பார்த்துக்--கொண்டு இருக்கிறேன்.
அதே நேரம் நியூயார்க் நகருக்கு அருகே ஒரு காட்டில் உள்ள ஓர் ஓட்டல் முன் ஸ்கூட்டர் வந்து நின்றது.
ரொம்ப நேரமாகி விட்டது.
எதிரிகளின் ஒற்றர் படைத் தலைவன் நியூயார்க்குக்குள் புகுந்துவிட்டதாகத் தகவல் கிடைத்து இருக்கிறது.
அவனை மடக்கிப் பிடிக்க வேண்டும். அதுதான் அவன் படம்.
அவ்வளவு தானே? இப்பொழுதே புறப்--படுகிறேன்.
ஒரு கார் ஏற்பாடு செய்யுங்கள்.

அதே நேரம்... நியூயார்க் சிறையில் இருந்து இரு கைதி-கள் தப்பி ஓடினார்கள்.
எதிரில் யார் வந்தாலும் சுட்டுத்தள்ளு!
ஸ்கூட்டரில் வந்த பெண்ணின் பெயர் விவியன். வரவேற்-பாளராக வேலை செய்கிறாள்.
முதலாளி அம்மா வாசலிலேயே நிற்கிறார்களே!
விவியன்! ஏன் இன்று இவ்வளவு தாமதம்?
என் பண்ணையில் வேலை முடியக் கொஞ்சம் நேரமாகி விட்டது!
நானும் அவரும் வெளியில் போக வேண்டும். உனக்காகத்தான் காத்திருக்-கிறோம்.
இவர்தான் ஓட்டல் முதலாளி.
எங்கே போயிருந்-தாய்?
இப்பொழுது தான் என் வேலை முடிந்தது.
நீ களைத்துப்-போனாலும் அழகாகத்தான் இருக்கிறாய்

எடு!
நான் இங்கே வர- வேற்பாளராக நீடிக்க வேண்டும் என்றால், என்மீது கை வைக்காதே!
ஜேம்ஸ்பாண்ட்! நீங்கள்புறப்படலாம். ஒற்றர்களைப் பற்றிய எல்லா விவரமும் இதில் இருக்கிறது.
ஜேம்ஸ்பாண்ட் கிளம்பினார்.
இதுதான் ரோடு மேப். தேவையானால் பார்த்துக் — கொள்ளுங்கள்! எவளாவது அழகியைப் பார்த்து அவள் பின்னே போய்- விடாதீர்கள்!
எங்கே போனாலும் கடமையில் தவற மாட்டேன்!
உங்கள் பெயர் என்ன? சாங்கின்... சீன வியாபாரியா... நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். நள்ளிரவு ஆனாலும் எங்கள் வரவேற்புப் பெண் விவியன் உங்க- ளுக்காகக் காத்து இருப்பாள்.

ஓட்டல் அதிபர் மனைவி.
துண்டு எடுக்க வந்தேன்... உன் டைரி இருந்தது...
டைரி விவியன்
VIVIENNE MICHEL
அழகாக ஆங்கிலம் எழுதுகிறாயே!
நான் லண்டனில் படித்தேன்.
உன் டைரியைப் படித்தேன். உன்னை எத்தனை குள்ளநரிகள் சுற்றி வந்திருக்கின்றன.
இங்கேகூட ஒரு குள்ளநரி சுற்றுகிறது. உங்கள் கணவர்-தான்.
என்ன, என் கணவர் உன்னை சுற்று-கிறாரா?
கை நீட்டவும் செய்கிறார்!
எனக்கு இங்கே வேலை பார்க்கவே பிடிக்கவில்லை. இப்பொழுதே நின்றுவிடு-கிறேன்.
இன்றைக்கு பெரிய விருந்தாளி ஒருவர் வருகிறார். நீ இருக்கத்தான் வேண்டும். நாளை வேண்டுமானால் போ.

இன்று ஓர் இரவுதான். நாளை எனக்கு விடுதலை.
வெளியே போகக் கார் தயார்.
விவியன் எங்கே?
போய்ப் படுத்துவிட்டாள். உங்கள் தொல்லை தாங்க முடியவில்லையாம்! வேலையை விட்டுப்-போகிறா-ளாம்.
அவள் போனால்...? பெரியபுள்ளி சாங்கின் இரவு வருவாரே!
இன்று யார் வருகிறார், தெரியுமா? உன் முறைப்-பையெல்-லாம் மூட்டை கட்டிவை!
இங்கே இருக்கும் வரை நான் வேலை செய்துதானே ஆகவேண்டும்!
சிரித்தபடி செய்!

சாங்கின் வருவார். சரியாகக் கவனித்துக் - கொள்
என்ன சொல்லுகிறார்?
சனியன் விட்டது! தனிமை எவ்வளவு இனிமையாக இருக்கிறது!
ஆடிப் பாட வேண்டும் போலிருக்கிறது!
ரேடியோவில் பாட்டு கேட்- -கலாமே?
வானிலை அறிக்கை... இடி மழையுடன் கூடிய புயல் எதிர்பார்க்கப் - படுகிறது.
வானத்தைப் பார்த்தால் மழை வரும் போலத்தான் இருக்கிறது.
இடி மின்னலுடன் மழை கொட்டியது.
சடசடசடசட...

இடி... வானமே வெடித்து விட்டதா?
இவ்வளவு பயங்கர மழையை நான் பார்த்ததே இல்லை!
கதவுகளையெல்லாம் அடைத்து விடுவது நல்லது.
ஒரு கதவை அடைத்த பொழுது...
ஆ!
காற்று வெளியே தள்ளியது.
நல்லவேளை, வரண்டாவில் விழுந்தேன்.
குளித்துவிட்டு, துணிகளை மாற்ற வேண்டியதுதான்.

மழையைக் கிழித்துக்கொண்டு ஒரு கார் விரைந்து வந்தது.
சர்...ர்...ர்.....
விவியன் குளித்தாள்
இந்த மழையும் புயலும் எப்பொழுது தான் நிற்குமோ?
இந்த மழையில் சாங்கின் எப்படி வருவார்?
இன்பக்கனவு ஒட்டல்!
VACANCY
நான் காத்திருக்கத்தான் வேண்டும்
வானிலை அறிக்கை கடைசியாக வந்த தகவலின்படி, இன்று இரவு முழுவதும் காற்றும் மழையும் இருக்கக்கூடும்.

ஏதாவது சூடாக செய்து சாப்பிடலாம்.
அப்பொழுது... வெளிக்-கதவில்-
டொக்! டொக்!!
கதவைத் திறந்தாள்.
விவியன் தானே? நீங்கள்...?
நாங்கள் மிஸ்டர்சாங்கின் ஆட்கள். அவரது வருகைக்கு முன் ஏற்பாடுகள்செய்ய வந்திருக்கி—
—றோம்
முதலில் கதவைத் திற. மழை கொட்டுகிறது.
நீங்கள் வருவது பற்றி முதலாளி ஒன்றும் சொல்ல வில்லையே.

சரி, நாங்கள் திரும்பிப்—போகிறோம்.
சரிதானே ஜோன்ஸ்!
ரொம்ப சரி சிமித்!
பரவாயில்லை. உள்ளே வாருங்கள்.
சாப்பிட—கூடாக என்ன கிடைக்கும்?
எது வேண்டுமானாலும் செய்து தருகிறேன்.
செய்ய வேண்டுமா? எதுக்கு வீண் சிரமம்!
என்ன அப்படிப்—பார்க்கிறாய்? அவனுக்கு மொட்டைத்தலை. முடி முழுக்க விழுந்துவிட்டது.

தலை மொட்டை என்றாலும், கை வலிமையானது.
ஏ... மொட்டை! உன் கைவரிசை--யைக் கொஞ்சம் காட்டேன்.
உன்னை அலாக்கா தூக்கட்டுமா!
பளார்!
டே... மொட்டை! பொம்பளை கையில் அடி வாங்கி விட்டாயேடா!

அடித்த கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துவிடு, சரியாகிவிடும்.
பொம்பளை கையில் அடி வாங்கிவிட்டு எந்த ஆம்பிள்ளையும் சும்மா இருக்க மாட்டான்!
நீ நினைக்கிற மாதிரி பெண் அல்ல நான். நான் பெண் புலி!
டுமீல்!
பளார்!
என்னம்மா பெண் புலி! எப்படி இருக்கிறது?
அவன் ஆண் புலி! தெரிந்துகொள்.

நான் யார் சிங்கம்.
மானுக்குத் துணையாக இருங்கள் என்று சாங்கின் எங்களை அனுப்பினார்.
முதலில் எங்களுக்கு சாப்பிட ஏதாவது கொடுக்கிறாயா?
என்ன, ஒன்றுமே இல்லையா? ரொட்டி, முட்டை இருந்தால் கூடப் போதும்.
மொட்டை! ஓட்டலில் வேறு யாராவது இருக்கிறார்களா என்று பார்.
ஜேம்ஸ்பாண்ட் காரில் வந்து கொண்டு இருந்தார்.
மழை பயங்கரமாக இருக்கிறதே. ஓர் ஓட்டல் பார்த்து ஒதுங்குவது நல்லது.

ஒரு ஆம்லேட் போட எவ்வளவு நேரம்? சீக்கிரம்!
கத்தி... கரண்டி... முள்...
நான் கூட ஒரு கத்தி எடுத்து வைத்துக் கொள்வது நல்லது!
எல்லா இடமும் பார்த்துவிட்டேன். நம்மைத் தவிர வேறு யாரும் இல்லை.
இப்ப கன்னத்தில் அடி பார்ப்போம்!
அவளை விடுடா. முதலில் பரிமாறட்டும்.

அவள் கன்னம் ஆப்பிள் போல இருக்கிறதே! அதை சாப்பிடலாமே!!
பொறுடா. மொட்டை. தலைவர் வந்து சாப்பிடுவார்!
இருவரும் சாப்பாட்டில் மூழ்கினார்கள்.
வானிலை அறிக்கை கேட்கிறீர் -களா?
ஓடிவிடுவதே நல்லது.
அவளை எங்கே காணோம்?
அதோ தோட்- -டத்துப் பக்கம் ஓடுகிறாள்.

மின்னல் என்னைக் காட்டிக் கொடுத்து விடும் போலிருக்கிறதே!
மொட்டை! அவளைப் பிடி! நான் காரை எடுத்து வருகிறேன்.
விவியன் ஓடுவதை கார் விளக்கு நன்றாகக் காட்டியது.
அதோ போகிறாள், பிடி!
கண்ணாமூச்சி விளையாட்டுப் போதும்! வெளியே வருகிறாயா? சுட்டுத் தள்ளட்டுமா?
விவியன் ஒரு மரத்தின் பின்னே பதுங்கிக் கொண்டாள்.
நெருங்கி வருகிறானே!

எழுந்திரு கண்ணே எழுந்திரு!
விவியன் எழுந்து வந்தாள்.
சுட்டு விடாதே, வருகிறேன்!
புலியிடம் இருந்து புள்ளிமான் தப்ப முடியுமா? அதிலும் நான் வரிப் புலி!
உன் பொன் மேனி புண்ணாக நான் விரும்ப வில்லை. இல்லா-விட்டால், சுட்டு இருப்பேன்!
சுட்டுக்-கொன்று விடு!!
கொல்லத்--தானே வேண்--டும்?
கொன்று விடுகிறேன்!
முதலில் உள்ளே கொண்டுவா!
வா இங்கே!

பளார்!
என்னை விடு, அடிக்காதே!
விவியன் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்தாள்!
மரியாதையா என்னை விட்டுவிடு! கொன்றுவிடு — — வேன்!!
மொட்டையன் ஓடிவந்து அவளைப் பிடித்தான்!
அழகான பெண் என்று நினைத்தால் இவ்வளவு முரடாக இருக்கிறாயே!
இனியும் இவளை விட்டு — வைக்கக் — — கூடாது.
ஜேம்ஸ்பாண்ட் ஓட்டல் தேடி அலைந்தார்.
ஓட்டல் சொர்க்கம்
எல்லா ஓட்டலிலும் இடம் இல்லையே!
இடம் இல்லை

ஓட்டல்
இன்பக் கனவு
10 கி.மீ
ஊருக்கு வெளியே ஒரு மூலை போலிருக்கிறது!
அதேநேரம்– விவியன் மயங்கி விழுந்தாள்.
அவளைக் கொண்டுபோய் குளியல் அறையில் போடு!
குளித்துவிட்டு வா, உனக்கு வேலை இருக்கிறது.
இந்தக் குளியல் உனக்கு புத்துணர்ச்சி தரும்.
முதலில் வயிற்றுப் பசி திரட்டும். வந்து, ஏதாவது செய்!
வயிறு நிறைய சாப்பிட்டு விட்டுப்–போங்கள்.
ஆனால் என்னை விட்டு விடுங்கள்.

நாம் ஏதோ செய்யப்போகிறோம் என்று பயப்படுகிறாள்.
சாங்கின் வருவார்! அவரிடம் உன் முரட்டுத்தனத்தைக்காட்டாதே!
டி.வி.யில் இப்பொழுது பாட்டு இருக்குமே.
வா, நாம் இருவரும் ஆடலாம்!
எனக்குக் களைப்பாக இருக்கிறது.
அப்படியானால் இப்பொழுது நாம் விளையாடலாமா?
நான் அடிப்பேனாம்! நீ ஆடுவாயாம்

திடீர் என்று விவியன் அவனைத் தாக்கினாள்.
ஏய், இது என்ன விளையாட்டு?
மொட்டை, கவனம்! அவள் கத்தியை எடுக்கிறாள்.
படார்!
கோபத்தில் கூட அழகாக இருக்கிறாய்!
அவளை என்னிடம் விடு.

இப்படியே நடனம் ஆடுவோமா?
அப்பொழுது அழைப்பு மணி அலறியது.
டிரிங்...
யாரோ வந்திருக்கிறார்கள்.
நீ கதவுக்குப் பின்னே போய் நில்
போய் கதவைத் திற! இடம் இல்லை என்று சொல். ஏதாவது இசகு பிசகா நடந்தால் சுட்டுவிடுவேன்!
ஜேம்ஸ்பாண்ட் மணியை அழுத்திக் கொண்டே இருந்தார்.
டிரிங்...
யாரையும் காணோமே?

கதவைத்திற! துப்பாக்கியை நினைவில் வைத்துக்கொள்.
என்ன வேண்டும்?
இடம் இருக்கிறதா?
இடம் இல்லையே!
வேறு இடம் பாருங்கள்!
அதே நேரம் உள்ளே வரும்படி விவியன் சைகை செய்தாள்.
என் கார் பஞ்சர் ஆகிவிட்டது.
எங்கேயும் போக முடியாது.

இங்கே இடம் இல்லையே!
இப்பொழுதுதான் அவளது சைகையை ஜேம்ஸ்பாண்ட் கவனித்தார்.
கொஞ்ச நேரம் இருந்து விட்டு, மழை விட்டதும் காரை சரி செய்துகொண்டு போய்விடுகிறேன்.
ஜேம்ஸ்பாண்ட் உள்ளே வந்தார்.
மழை நிற்கும் வரை நான் இங்கே இருப்பதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே?
இடம் இல்லாமல் ஏற்கனவே நாங்களே நின்று கொண்டு இருக்கிறோம்!
உங்களுடன் சேர்ந்து நானும் நின்றுகொள்—
—கிறேனே

நானும் வருகிறேன். உன் காரை சரி செய்வோம்.
ஓட்டல் காரியிடம் கேட்போமே.
ஏம்மா, நான் இங்கே நிற்பதில் உனக்கு ஆட்சேபனை இல்லையே?
ஒரு பிரமுகர் வருகிறார். அவருக்காக ஒரே ஒரு அறை ஒதுக்கி வைத்திருக்கிறோம்.
நீ வேண்டுமானால் அந்த அறையில் போய்ப்-
-படுத்துக்கொள்.

மிகவும் நன்றி. என் சாமான்களை எடுத்து வருகிறேன்.
நான் எடுத்து வருகிறேன்.
அது என் கடமை. நான் இங்கே வேலை செய்யும் பெண்!
இருவரும் கொலைகாரர்கள். என்னைப் பிடித்து வைத்திருக்- -கிறார்கள்.
பார்க்கிறான், பார். பிறகு பேசுவோம்.
இனி நீ பயப்பட வேண்டியது இல்லை.
உனக்கும் ஒரு துப்பாக்கி வேண்டுமா?
அவர்கள் பார்த்துவிட்டால், விபரீதமாகி- -விடும்.

இவ்வளவுதான். மற்ற சாமான்கள் காரில் இருக்கட்டும்
பார்க்கிறான் பாருங்கள்!
பயப்படாதே! நான் கவனித்துக்-கொள்கிறேன்!
இந்தா, அறை சாவி. பேசாமல் பூட்டிக்-கொண்டு படு!
வெளியே தலை காட்டினால் உனக்குத் தலையே இல்லாமல் செய்து-விடுவோம்!

ஓட்டல் ரிஜிஸ்டர் எங்கே? எழுத வேண்டுமே!
அதெல்லாம் வேண்டாம். நீ யார்?
சாதாரண போலீஸ் அதிகாரி!
எப்படியோ மோப்பம் பிடித்துத்தான் இங்கே வந்திருக்கிறான்!
நாங்கள் யார் என்பதையும் சொல்லிவிடு– –கிறேன்!
எங்கள் முதலாளி ஒரு தொழில் அதிபர். அவர் இங்கு தங்கியிருந்த பொழுது பணம் பத்து இலட்சம் காணாமல் போய்விட்டது. அதைத் தேடி வந்தோம். இவனிடம் கேட்டபொழுது எங்களை கொலை செய்ய முயற்சித்தான்.

இந்தக்—
கத்திதான்.
பொய் சொல்லுகிறார்கள்! நம்பாதீர்கள்!!
எல்லாம் கட்டுக்கதை, இவர்கள் கொலைகாரர்கள்! கொள்ளைக்காரர்கள்!!
இவள்தான் திருடி! எங்கள் மீது வீண் பழி போடுகிறாள்.
எல்லாம் காலையில் பார்த்துக்—கொள்ளலாமே!

எனக்குப் பசிக்கிறது. முதலில் சாப்பிட ஏதாவது வேண்டும்.
சாப்பாடு தயாரித்துக்கொண்டே விவியன் எல்லா-வற்றையும் சொன்னாள்.
அவர்களிடமும் துப்பாக்கி இருக்கிறது.
சுட்டுக் கொல்ல முயற்சித் தார்கள்.
உங்கள் வேலையாக இங்கே வந்தீர்களா?
இல்லை. வாசிங்டனுக்குப் போய்க் – கொண்டு இருக்கிறேன்.
அவர்கள் ஏன் இங்கே வந்தார்கள்?
எனக்குத் தெரிய வில்லை!

பரவாயில்லை. இனி அவர்களை நான் கவனித்துக்-கொள்கிறேன். அவர்கள் ஏதோ ஒரு திட்டத்துடன் இங்கே வந்திருப்பது மட்டும் உறுதி.
நேரமாகிவிட்டது. விளக்குகளை அணைக்கலாமா? மின்சாரத்தை விணாக்கக்--கூடாது!
எண்ணெய் விளக்கு தயாராக இருக்கிறது!
எந்த அறை? வந்து காட்டு!

இருவரும்
சொர்க்கத்துக்குப்
போகிறீர்களா?
இதுதான்
உன் அறையா?
எல்லாவற்றையும்
பூட்டிக்கொள்.
யாருக்கும்
கதவைத் —
திறக்காதே!
துப்பாக்கி
வைத்துக்—
—கொள்,
நல்லது!
ஆபத்து
ஏற்பட்டால்,
கண்ணை மூடிக்
கொண்டு சுடு!
அந்த சத்தம்
கேட்டு நான்
ஓடி வந்து —
விடுவேன்.

நீங்களும் இங்கேயே தங்கிக் கொள்ளுங்- -களேன்!
தனியாக இருந்தால்தான், அவர்களின் திட்டம் வெளிப்படும் என்று நினைக்கிறேன்!
நள்ளிரவு. இருவரும் பூனை போல...
அவன் எந்த அறையில் தூங்குகிறான்?
கொர்...ர்...ர்ர்ர்...
நல்ல தூக்க
ஒரே குண்டுதான்.
குறி தவறக்- கூடாது!
கதவையொட்டி ஒரு நாற்காலியை வைத்திருக்கிறானே!

துப்பாக்கி நுழையும் அளவுக்குத் திறந்து கொள்ளலாம்.
எனக்கு ஒரு யோசனை!
துப்பாக்கி குறி தவறக் கூடும். அறைக்கு வெடி வைத்து விட்டால் என்ன?
நல்ல யோசனை. வைத்து விடுவோம்.
படார்...ர் ...ர்...ர்...
அந்தப் பெண்ணைப் போய்ப் பார்ப்போம்!

அவளது அறையில் நான் ஏற்கனவே ஓட்டை போட்டு விட்டேன்!
எப்படி என் முன் யோசனை?
வெடி சத்தம் கேட்டு விவியன் விழித்துக்-கொண்டாள்
நான் ஏதாவது கெட்ட கனவு கண்டேனா?
இந்த அலமாரியை நான் மூட வில்லையா?
மூடிய ஞாபகம் இருக்கிறதே! பிறகு எப்படி திறந்தது?
அலமாரியில் இருந்து ஜோன்ஸ் வெளிப் - பட்டான்!
ஆ! நீ!

மொட்டையன் அவளைத்—தாக்கினான்.
கும்!
விவியன் அடிபட்டு விழுந்தாள்.
இந்த அறையிலும் குண்டு வைக்கலாம்!
தூங்கும் அழகியே! வருகிறோம்!
வா, மொட்டை! குண்டு வெடிக்குமுன் நாம் ஓடி விடுவோம்!
டமார்!
குண்டு வெடித்தது தீப்பற்றிய அறையில் விவியன் மயங்கிக்—கிடந்தாள்.

மொட்டை! ஓடிவா! கதவைப் பூட்ட வேண்டும்.
அப்பொழுது தோட்டத்தில் இருந்து ஓர் உருவம் ஓடிவந்தது!
எதிர் பார்த்தது தான்!
அவர் ஜேம்ஸ்பாண்ட் தீக்குள் பாய்ந்தார்.
விவியன்... விவியன்...
விவியன்! கண்களைத் திறந்து பார்!!
முதலில் இவளைக் காப்பாற்ற வேண்டும்!
விவியனை வெளியே தூக்கி வந்தார்.
ஒரு மரத்தடியில் படுக்க வைத்தார்.
என்ன நடந்தது.
உனக்கு ஆபத்து

அந்தக் கொலை-காரர்கள்?
அவர்களை பிறகு கவனிப்போம்!
நீ பிழைத்துக்-கொண்டாயே அது போதும்
நீங்கள் எப்படித்-தப்பினீர்கள்?
என் படுக்கையில் தலையணைகளை அடுக்கி வைத்து விட்டு, நான் தோட்டத்தில் பதுங்கிக்-கொண்டேன்.
நான் யார் தெரியுமா? நான்தான் ஜேம்ஸ்பாண்ட் 007!
ஓ! நான் யோகக்காரி!
அவர்கள் யார்? எதுக்காக இங்கே வந்தார்கள்?
அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

ஓட்டல் முழுவதுமே பற்றி எரிகிறதே!
இன்று இரவு முழுக்க நாம் தோட்டத்தில்–தான் இருக்க வேண்டும் போலிருக்–கிறது!
என் கார் இருக்கிறது. காலையில் நாம் பாதுகாப்பான இடத்துக்குப்–போய் விடலாம்.
உன்னைத் தூக்கி வரும் பொழுது என் துப்பாக்கியை–யும் எடுத்து வந்துவிட்டேன். வைத்துக்–கொள்.
எனக்கு எதுக்கு துப்பாக்கி?
நீ போய் என் காரில் படுத்துக்–கொள்.

ஜேம்ஸ்! என்னைத்-தனியே விட்டுப்-போகாதீர்கள்!
நான் அவர்களைப்-பிடித்தாக வேண்டும்.
நான் சீக்கிரம் வந்து விடுவேன். வராவிட்டாலும் கவலைப்-படாதே.
வாசிங்டனுக்குப் போன் செய்து. போலீஸ் தலைமை நிலையத்தில் 007 என்று கேட்டால் போதும், என்னைப் பற்றிய விவரம் கிடைத்து-விடும்!
ஜேம்ஸ்பாண்ட் ஊம்பிச் சென்றார். காரை நெருங்க முடியாதபடி தீ எரிந்து கொண்டு இருந்தது.
இப்பொழுது என்ன செய்வது?
அந்த ஆள் வந்து எல்லா-வற்றையும் கெடுத்து-விட்டான்!
முதலில் நீ ஓடிவா.
ஜேம்ஸ்பாண்ட் வந்துவிட்டார்! நில்லு-ங்கள்!

விவியன்! நீயும் ஒரு கை கொடு!!
பின்னே திரும்பி நடங்கள்!
நான் மொட்டையனைக் கவனிக்கிறேன். நீ அவனைக் -கவனி!
மொட்டை! துப்பாக்கியைக்- -கீழே போடு!
அதே நேரம்!
படார்!
இப்ப சுடு பார்ப்போம்!

மொட்டை அவளைப்--பிடி!
யாரும் ஓர் அடி கூட நகரக்கூடாது!
மொட்டை பெட்டியைத் தூக்கி எறிந்தான்.
சர்...
டமார்!
ஓடிவா சிமித் ஓடிவிடுவோம்!

டுமீல்!
டுமீல்!!
முதலில் அவர்களைப் —பிடி!
நீங்கள் அப்படியே இருங்கள்!
வெகு தூரம் போய் — விட்டார்களே!
அவர்களைப் பிடித்தே ஆக வேண்டும்!
ஒதுங்கிப் — போ!
டுமீல்!
ஓ! அவர்களிடம் எந்திரத் துப்பாக்கி இருக்கிறதா?

அவர்களைப்- -பிடித்ததுமே சுட்டுக் கொன்று இருக்கலாம்!
அவர்கள் யார் என்பது தெரிய வேண்டுமே!
அவர்கள் மீண்டும் வருகிறார்கள்!
அவர்கள் கார் இங்கேதான் இருந்ததா?
தப்பி ஓடும் பொழுது காரை விட்டுப் போய்- -விட்டார்கள் போலிருக்கிறது!
இப்பொழுது அவர்கள் தப்பி ஓட முயற்சிக்க- -மாட்டார்கள்.
நம்மைக் கொல்ல முயற்சிப்பார்கள்.
நீ ஓடிப்போய் அந்த மரங்கள் இடையே பதுங்கிக் கொள்!

இந்தக்
காட்டுக்குள் கார்
வரமுடியாது!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!!
அந்தக் –
கட்டிடத்துள்
பதுங்கிக் –
–கொண்டார்
–களா?
சிமித் பதுங்கி வந்தான்.
அவன் அங்கேயே
பார்த்துக்கொண்டு
இருக்கிறான்.
மொட்டை கட்டுக்கொண்டே இருக்க சிமித்
பின்புறமாகப் பதுங்கி. முன்னேறினான்.

சரியான ஏமாளி போலிருக்கிறது!
மிக அருகில் வந்துவிட்டான.
கணக்குத் தீர்ந்தது!
டுமீல்!
எங்கே ஆளைக்— காணோம்!
ஜேம்ஸ்பாண்ட் வேறு பக்கம் போய் விட்டார்!
நான் வல்லவனுக்கு வல்லவன்!
கட்டிடத்தின் பின்பக்கத்தை நோக்கி ஓடினார்.
ஒருவன் உள்ளேதான இருக்கிறான்!
மொட்டை! அவனைக்—காணோம்! அந்தப்—பெண்ணும் இல்லை!!

பின்பக்கம்
ண்டுமாரி!
பொழிந்தது.
டுமீல்... டுமீல்...
மொட்டையன் கையில்
குண்டு பாய்ந்தது!
டுமீல்! டுமீல்!
ஆ!
மொட்டையன் ஒற்றைக்-
-கையுடன் போராடினான்.
பிக்கி! ஓடிவா! அவன் பின்பக்கமா வந்துவிட்டான்!
ஆ!
டுமீல்!

கீழே விழுந்த எந்திரத் துப்பாக்கி சுட்டுக்கொண்டே இருந்தது!
டுமீல்....
டுமீல்....
டுமீல்....
ஓடிவா மொட்டை! காருக்கு வா!
சீக்கிரம்... ஏறு...ஏறு! விவியன் பார்த்து விட்டாள்!
டுமீல்!
அதோ பார். அந்தப் பெண்!

டுமீல்... டுமீல்...
அவன், அதோ! காரைக் கிளப்பு.
அவன் மீது மோது!
ஜேம்ஸ்பாண்ட் விலகிக்கொள்ள, கார் தாறுமாறாக ஓடியது!
நிறுத்து! நிறுத்து!!
ஜேம்ஸ்! தப்பி விட்டார்களே!
வெகுதூரம் போக முடியாது! ஓட்டுகிறவனை சுட்டுவிட்டேன்! வா, பார்ப்போம்!

ஏரிக்குள் விழுகிறதே!
ஆழமான ஏரி ஆயிற்றே!
கொன்று புதைப்பதற்குப் பதில் அவர்களை உயிருடன் புதைத்தாகி விட்டது!
மிகவும் களைத்து விட்டாய்.
நீங்களும் தான்.
பொழுது விடிய கொஞ்ச நேரம் இருக்கிறது. அதுவரை தூங்கலாம்

இந்தக் கட்டிடம் காலியாகத்தான் இருக்கிறது!
என்னைத் தனியே விட்டுப்போய் விடாதீர்கள்!
இதில் துணிகள் இருக்கின்றன. மாற்றிக்கொள்.
ஏரியில் கார் மூழ்கிக்- கொண்டு இருந்தபொழுது...
மொட்டையன் உயிருக்குப் போராடிக்கொண்டு இருந்தான்.
அவனைக் கொல்லாமல் நான் சாகமாட்டேன்!
விவியன்! நிம்மதியாகத் தூங்கு!!

மொட்டையன் தப்பினான்!
சிமித் போயிட்டான்! போகட்டும்
நான் அவனைக் கொல்லாமல் சாக மாட்டேன்!
கனவு கண்டு என்ன பயன்? நாளைக் காலை போய் விடுவாரே!
திரைச்சேலை ஏன் ஆடுகிறது? அவருக்கு டா...டா... சொல்லுகிறதா!
திடீர் என்று
ஆ!

விவியன் அலறினாள்.
ஜேம்ஸ்... ஜேம்ஸ்... எழுந்திருங்கள்... அவன்... அவன்...
டுமீல்...
டுமீல்!
மொட்டையன் மீது குண்டு பாய்ந்தது!
ஆ!
விவியன்! நீ இங்கேயே இரு. அவனை நான் கவனிக்கிறேன்.

இருக்கிறானா? செத்தானா?
மூச்சு இல்லை! ஏரியில் இருந்து தப்பும்பொழுது குற்றுயிராகத்தான் வந்திருக்கிறான்.
இறுதி மரணம் அவனைத் தழுவி விட்டது!
மறுநாள் காலை.
ஜேம்ஸ்... ஜேம்ஸ்...
போய்விட்டாரா? காரையும் காணோம்!
ஏன் வருத்தப்படுகிறேன்? ஜேம்ஸ் போய் விடுவார் என்பது தெரிந்ததுதானே!

ஜேம்ஸ்பாண்டுடன் ஒரு நாள் இரவு இருந்ததே பெரிய பாக்கியந்தான்.
அவரைப் போன்ற ஒரு வீரனைப் பார்க்க முடியுமா?
திடீர் என்று ஒரு கடிதம் விவியன் கண்ணில் பட்டது.
இது என்ன கடிதம்?
ஜேம்ஸ்பாண்ட் எழுதி வைத்திருப்பாரோ!
அன்புள்ள விவியன்! கடமை அழைக்கிறது. நான் போகிறேன். இங்கே இருக்கும் மற்றொரு கடிதத்தைப் போலீசாரிடம் கொடுத்துவிடு!
எல்லா விவரத்தையும் போலீசுக்கு எழுதிவைத்திருப்பாரோ?

மேலே படிப்--போம்!
குறிப்பு:
நீ இப்பொழுது பயன்படுத்தும் சோப்பு அவ்வளவு வாசமாக இல்லை. "கனவுக்கன்னி" சோப்பு மிகவும் மணமாக இருக்கும். அதைப் பயன்படுத்து!
போலீசே வந்து விட்டது!
எங்களுக்கு யாரோ போன் செய்தார்கள் இங்கே ஒரு பிணம் கிடக்--கிறதாமே.
அட! இந்த மொட்டையனா? இவன் நமது இராணுவ இரகசியங்களை அறிய எதிரிகள் ஏவிய ஒற்றன்!
பிடித்து சிறையில் வைத்து இருந்தோம். நேற்று இரவு இவனும், இவன் கூட்டாளி சிமித்தும் தப்பி ஓடி-விட்டார்கள்!
நேரே இங்கே வந்திருப்பார்கள்
ஜேம்ஸ்பாண்டின் கடிதத்தைக் கொடுத்தாள்.
வேறு ஒன்றும் இல்லை. உனக்குக் காலை டிபனுக்கு ஏற்பாடு செய்யும்படி ஜேம்ஸ் எழுதியிருக்கிறார்!

மொட்டையனை விழுத்தியதற்காக உங்களைப் பாராட்டப் பெரிய அதிகாரிகள் வருகிறார்கள்.
விவியன்! ஜேம்ஸ் எல்லா விவரமும் சொன்னார்! உன் துணிச்சல் பாராட்டத்தக்கது!
ஜேம்ஸ்பாண்டின் துணை இல்லாவிட்டால், நான் ஒன்றும் செய்திருக்க முடியாது இன்ஸ்பெக்டர்.
ஜேம்ஸ் எனக்கு போன் செய்தார். எல்லாம் விவரமாகச் சொன்னார். சாங்கின்தான் இந்த ஒற்றர் கூட்டத்தின் தலைவன்.
அவனை நேற்றுஇரவே பிடித்துவிட்டோம்.
ஏரியில் மூழ்கிய காரை வெளியே எடுத்துவிட்டோம். அதில் சிமித்தின் உடல் இருந்தது.
ஓட்டல் எரிந்துவிட்டதே– உன் வேலை போய்விட்டதே என்று கவலைப்படாதே.

உன் துணிச்சலுக்கு ஏற்ற வேலை ஒன்று சொல்லட்டுமா? எங்கள் படையில் சேர்ந்துவிடேன்! ஆம், பெண் போலீஸ்
யோசிக்க வேண்டா 'சரி' என் சொல்.
சரி!'
என் பண்-ணைக்குப் போய் விட்டு வந்து விடுகிறேன்!
உன்னை ஆவலுடன் எதிர் பார்ப்பேன்!
விவியன் போலீசில் சேர்ந்தாள்.
நான் லேடி ஜேம்ஸ்பாண்ட் என்று புகழ் பெறுவேன்!
லேடியாவது ஜோடியாவது! இந்த ஜாடிக்கு மூடி தேவை--யில்லை!
(முடிந்தது)



அடுத்த காமிக்ஸ்
ராணி காமிக்ஸ்
கொள்ளையரிடம் சிக்கிய
குழந்தைகளைக் காப்பாற்றிய
வேட்டை நாய்
வேகத்தில் வேங்கை!
வீரத்தில் சிங்கம்!!
ஆகஸ்டு 16 -ந்தேதி
வெளிவருகிறது.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!
"ராணிகாமிக்ஸ்," சென்னை—600 007

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

இதோ! கேம்ப்கோ ட்ரீட் - அதிகச் சுவை
ததும்பும் கேரமல் மில்க் சாக்கலேட் பார்

கேம்ப்கோ ட்ரீட்! கொண்டாட்டங்களுக்குக் குதூகலம் சேர்த்திட ஒரு மகத்தான வழி! சுவை சேர்க்கும் கேரமல்லும் வளமூட்டும் மில்க் சாக்கலேட்டும் கூடித் தரும் மறுக்க முடியாத ருசி அனுபவம்... உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் ஏற்றதொரு அற்புத விருந்து கேம்ப்கோ ட்ரீட்!

கொண்டாட்டமா? கொண்டு வா கேம்ப்கோ ட்ரீட்!

R K SWAMY/CL/6039

இந்தியாவின் மிகப்பெரிய அதிநவீன ஆலை அளிப்பது கேம்ப்கோ லிமிடெட், மங்களூர்.